வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 26.08.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை கேலோ இந்தியா உரையாடல் நிகழ்ச்சியில் காணொளி காட்சி மூலம் பங்கேற்கவுள்ளார்.
- உலகம் முழுவதும் உள்ள கேரள மக்கள் இன்று ஓணம் பண்டிகையை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.
- உலகின் மிக வேகமாக வளரும் முக்கிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- இ-ஷ்ரம் இணையதளம் தொடங்கப்பட்டு இன்றுடன் 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

மோடி – 1 (07)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை காணொளி காட்சி மூலம் கேலோ இந்தியா உரையாடலில் பங்கேற்கவுள்ளார். 2026 தேசிய விளையாட்டு தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, மை பாரத் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த உரையாடல் நிகழ்ச்சி மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 கல்லூரிகளில் இளைஞர்களின் பங்கேற்புடன் நாடு முழுவதும் நடத்தப்பட உள்ளது.

மோடி – 2 வாய்ஸ் (19)

(வாய்ஸ்)

இந்நிகழ்ச்சி விளையாட்டு, இளைஞர் தலைமைத்துவம், குடிமைப் பொறுப்பு, தன்னார்வத் தொண்டு, உடல் தகுதி மற்றும் தேசக் கட்டுமானம் ஆகியவற்றை இணைக்கும் ஒரு தளமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இது நாட்டின் விளையாட்டு லட்சியங்களில் இளைஞர்கள் ஈடுபடுவதற்கு ஒரு நேரடி வழியை வழங்குவதோடு அவர்களின் கருத்துகளும், கண்ணோட்டங்களும் வெளிப்பட ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் கூறப்படுகிறது. விளையாட்டில் ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கும், முன்னணி இந்திய விளையாட்டு வீரர்கள் மற்றும் பதக்க வெற்றியாளர்களுக்கும் இடையேயான நேரடி கலந்துரையாடல் இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாகும். இந்த உரையாடல் நிகழ்ச்சி விளையாட்டு, ஒலிம்பிக் லட்சியங்கள், இளைஞர் தலைமைத்துவம், விக்சித் பாரத் மற்றும் நஷா முக்த் யுவா ஆகிய 5 கருப்பொருள்களை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளது. 2026 தேசிய விளையாட்டு தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் நாளை பஞ்சாப் மற்றும் ஹரியானாவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மற்றும் சண்டிகர் யூனியன் பிரதேசத்திலுள்ள 2 கல்லூரிகளில் கேலோ இந்தியா சம்வாத் என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மோடி – 3 வாய்ஸ் (04)

உள்ளூர் விளையாட்டு வீரர்களும், மக்கள் பிரதிநிதிகளும் பங்கேற்பதன் மூலம் இளைஞர்கள் தங்கள் எண்ணங்கள், ஆலோசனைகள் மற்றும் லட்சியங்களை பகிர்ந்து கொள்ள இந்த உரையாடல் நிகழ்ச்சி சிறந்த தளமாக அமையும்.

ஓணம் - 1 (20)

உலகம் முழுவதும் உள்ள கேரள மக்கள் இன்று திருவோணத்தை கொண்டாடி வருகின்றனர். புராண கால மன்னர் மகாபலியை வரவேற்பதற்காக பாரம்பரிய மலர் விரிப்பான ஓணப் பூக்களத்துடன் திருவோண கொண்டாட்டங்கள் தொடங்கின. இந்த அறுவடை திருவிழாவை கேரள மக்கள் ஜாதி, மத பேதமின்றி கொண்டாடுகின்றனர். சபரிமலை, ஆரன்முலா மற்றும் குருவாயூர் ஆகிய மலைக் கோவில்கள் உட்பட பல கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வாழும் கேரள மக்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும், புதிய அறுவடையை முன்னிட்டு இயற்கைக்கு நன்றி செலுத்தும் ஒரு தருணமே ஓணம் என்று கூறியுள்ளார். இந்த மங்களகரமான பண்டிகை அனைவருக்கும், மகிழ்ச்சி, அமைதி, நல்ல ஆரோக்யம், மற்றும் செழிப்பை கொண்டுவருவதோடு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்க மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் தாம் பிரார்த்தனை செய்வதாக கூறியுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், கேரளாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தையும், காலத்தால் அழியாத மரபுகளையும், பிரதிபலிக்கும் இந்த பண்டிகை ஒவ்வொரு வீட்டையும் மகிழ்ச்சி, ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும் என்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஓணம் – 2 (05)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ஓணம் பண்டிகை உலகம் முழுவதும் மிகுந்த உற்சாகத்துடன் வண்ண மயமாக கொண்டாப்படுவதாகவும், மகிழ்ச்சி, செழிப்பு, நம்பிக்கை ஆகிய உணர்வுகளை இந்த பண்டிகை மேலும் வலுப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

ஐ.நா. (12)

பல்வேறு நாடுகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல்களால் மனிதாபிமான விளைவுகளை தணிப்பதற்கான நடவடிக்கககளை எடுப்பதே ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. நெருக்கடியில் உணவு என்ற தலைப்பில் பாதுகாப்பு சபையின் விவாதத்தில் உரையாற்றிய ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. ஹரீஷ், உலகளாவிய மற்றும் உள்ளூர் உணவு நெருக்கடிகளை தணிப்பதில் பாதுகாப்பு சபையின் பங்கு என்பது குறித்து எடுத்துரைத்தார். எரிசக்தி சந்தைகள், உர விநியோகம், கடல்வழிப் போக்குவரத்து, மனிதாபிமான தளவாடங்கள் மற்றும் விவசாய வர்த்தகம் ஆகியவற்றில் உண்டாகும் இடையூறுகள், பிராந்திய மோதல்கள் காரணமாக, உணவு பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

மன்கி பாத் (09)   188

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் 137ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில், வரும் 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, காலை 11 மணிக்கு, ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியை, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newson air மொபைல் செயலியிலும் ஒலிபரப்பக் கேட்கலாம். ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையைத் தொடர்ந்து அதன் பிராந்திய மொழி வடிவம் இடம்பெறும்.

மிலாடி நபி (16)

நபிகள் நாயகம் பிறந்த நாளான இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் மிலாடி நபி சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மிலாடி நபி பண்டிகையை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கும், முஸ்லீம் சமூகத்தினருக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், மிலாடி நபி பண்டிகையானது நபிகள் நாயகம் அவர்களின் போதனைகளை நினைவு கூரும் ஒரு சந்தர்ப்பம் என்றும், அவரது போதனைகள் மக்களை நீதி மற்றும் கடமையுணர்வை தூண்டுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த புனித நன்னாள், கருணை, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகிய விழுமியங்களை கடைபிடிக்கவும், சகோதரத்துவத்தை வலுப்படுத்தவும், அனைவருக்கும் உத்வேகம் அளிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மிலாடி நபி பண்டிகை உலகம் முழுவதும் ஒற்றுமையையும், மகிழ்ச்சியையும், மேலும் வளர்க்கும் என்று தமது சமூக ஊடகப் பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ரேகா குப்தா (10)

நாட்டின் முன்னேற்றத்திற்கு பெண்களுக்கு அதிகாரமளிப்பது அவசியம் என்று டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறினார். புதுடெல்லியில் இன்று டெல்லி லக்ஷ்மி யோஜனாவின் ஒப்புதல் கடிதங்களை வழங்கிய அவர், இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை 9 லட்சத்து 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பதிவுசெய்துள்ளதாக கூறினார். இன்று 2 ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாக கூறிய அவர் உரிய நடைமுறைகளை முடித்த பிறகு இந்த பயனாளிகள் அடுத்த மாதத்தின் முதல் தேதியில் தலா 2ஆயிரத்து 500 ரூபாய் பெறுவார்கள் என்று திருமதி ரேகா குப்தா கூறினார்.

நிர்மலா சீதாராமன் – 1 (06)

உலகின் மிக வேகமாக வளரும் முக்கிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். நீடித்த வளர்ச்சி, இளம் மக்கள் தொகை, விரிவடைந்து வரும் நுகர்வு மற்றும் மூலதன சந்தைகள் ஆகிய தனிச்சிறப்புடன் இந்தியா முன்னேற்றப் பாதையில் செல்கிறது என்று அவர் கூறினார்.

நிர்மலா சீதாராமன் – 2 வாய்ஸ் (17)

(வாய்ஸ்)

டொரண்டோவில் இன்று நடைபெற்ற இந்திய வர்த்தக சமூகத்தின் முக்கிய உறுப்பினர்களிடையே உரையாற்றிய திருமதி நிர்மலா சீதாராமன், இந்தியாவின் மாற்றம் என்பது விரைவான நகரமயமாக்கல், வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கம் மற்றும் உலகத்தரம் வாய்ந்த டிஜிட்டல் உள்கட்டமைப்பு ஆகியவற்றால் பெரும் மாற்றம் கண்டுவருவதாக கூறினார். இந்த முன்னேற்றங்கள் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன என்றும், அவர் உறுதிபட கூறினார். மேலும், நிதி மற்றும் வணிக சேவைகளுக்கான அணுகலை மாற்றுவதில் இந்தியாவின் டிஜிட்டல் சூழல் அமைப்பின் பங்கையும், நிதியமைச்சர் எடுத்துரைத்தார். பணம் செலுத்துதல் துறையில் மட்டுமல்லாமல், அடுத்த தலைமுறை டிஜிட்டல் நிதி உள்கட்டமைப்பை வடிவமைப்பதிலும், கனடிய வங்கிகள், Fintech நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுவதால், குறிப்பிடத்தக்க வாய்ப்புகள் உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார். வளர்ந்து வரும் இந்தியா-கனடா பொருளாதார கூட்டாண்மையை எடுத்துரைத்த திருமதி நிர்மலா சீதாராமன் கனடாவிலுள்ள இந்திய புலம்பெயர்ந்தோர் இருநாடுகளுக்கும் இடையே ஒரு பாலமாக விளங்குகின்றனர் என்று பெருமிதம் தெரிவித்தார்.

நிர்மலா சீதாராமன் – 3 (07)

2025-ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற ஜி-7 உச்சி மாநாட்டின் இடையே பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், கனடா நாட்டு பிரதமர் திரு. மார்க் கார்னிக்கும் இடையே இருதரப்பு உறவுகள் மேம்பட்டுள்ளதாக கூறிய நிதியமைச்சர், எதிர்காலத்தை மையமாகக் கொண்ட கூட்டாண்மையை இருநாடுகளும் மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக கூறினார். கனட நிதியமைச்சர் திரு. பிரான்சுவா பிலிப்புடன் பொருளாதார மற்றும் நிதி சார்ந்த பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொண்டார்.

புதுச்சேரி (07)

புதுச்சேரியில் அன்னை தெரேசாவின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி அவரது சிலைக்கு புதுச்சேரி அரசு சார்பில் பாரதி பூங்கா அருகிலுள்ள அன்னை தெரேசா சிலைக்கு சட்டப்பேரவைத் தலைவர் திரு. அன்பழகன் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜான் குமார், திரு. நேரு என்கிற குப்புசாமி, புனித அன்னை தெரேசா நற்பணி மன்றத்தினர், அருட்சகோதரிகள் ஆகியோர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினர்.

செஷல்ஸ் (16)

பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும், கிராமப்புற வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும், நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், மீன் வளத்துறையையும், நீல பொருளாதாரத்தையும், முக்கியத் தூண்களாக இந்தியாவும் செஷல்ஸூம் அங்கீகரித்துள்ளன. செஷல்ஸின் மீன் வளம், விவசாயம் மற்றும் நீல பொருளாதாரத்துறை அமைச்சர் திரு. வாலஸ் காஸ்க்ரோ தலைமையிலான செஷல்ஸ் தூதுக்குழுவுடன் மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வள அமைச்சகம் இருதரப்பு சந்திப்பை நடத்தியது. புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தற்போதுள்ள கட்டமைப்புகளை மறு

ஆய்வு செய்யவும், புதிய வழிகளை ஆராயவும், நீடித்த கடல்வள பயன்பாட்டிற்கான செயல்திட்டத்தை உருவாக்கவும், இரு நாட்டு பிரதிநிதிகளும் கலந்துரையாடினர். இந்திய தூதுக்குழுவினர், இருநாடுகளுக்கும் இடையிலான கடல்சார் கூட்டாண்மையை வலியுறுத்தியதோடு, மீன்வளம், மீன் வளர்ப்பு, அறிவியல் ஆராய்ச்சி உள்ளிட்டவற்றில் தொழில்நுட்ப ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துரைத்தனர்.

## இ-ஷ்ரம் (19)

இ-ஷ்ரம் இணையதளம் தொடங்கப்பட்டு இன்று 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இது இந்தியாவின் அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் 2021ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த இ-ஷ்ரம் நாட்டின் முதல் ஆதார் அடிப்படையிலான அமைப்பு சாரா தொழிலாளர்களின் தேசிய தரவு தளத்தை உருவாக்கியுள்ளது. இது பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு தனித்துவமான உலகளாவிய கணக்கு எண்ணை வழங்குவதோடு, நலத்திட்டங்கள், வேலை வாய்ப்புகள், திறன் மேம்பாடு, தொழிற்பயிற்சி மற்றும் ஓய்வூதிய சேவைகளை ஒருங்கிணைக்கும் ஒரு டிஜிட்டல் தளமாக விளங்குகிறது. 31 கோடியே 89 லட்சத்திற்கும் அதிகமான பதிவுகளுடன் இ-ஷ்ரம் பயன் வழங்கல், பயன்களை எளிதில் எடுத்துச் செல்லுதல் மற்றும் ஆதார் அடிப்படையிலான கொள்கை வகுத்தல் ஆகியவற்றை மேம்படுத்தியுள்ளது. இதில் பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் யோஜனா, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா, பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா, தேசிய சமூக உதவித் திட்டம், ஒரு நாடு ஒரே ரேஷன் அட்டை, பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா கிராமின் உள்ளிட்ட திட்டங்களும் அடங்கும்.

உக்ரைன் (13)

உக்ரைன் மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்ததற்காக இந்தியாவிற்கு உக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி நன்றி தெரிவித்துள்ளார். உக்ரனின் 35ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நேற்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அமைதிக்கான தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இது குறித்து நன்றி தெரிவித்துள்ள திரு. ஜெலன்ஸ்கி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதும், இந்தியாவுடன் பரஸ்பர உறவுகளை மேலும் வளர்ப்பதில் உக்ரனின் உறுதிப்பாட்டையும், உறுதிபடுத்தியுள்ளார். முன்னதாக, உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஆன்ட்ரி சிபிஹா, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்த வாழ்த்துக்கு நன்றி தெரிவித்துள்ளார். மேலும், இந்தியா-உக்ரைன் உறவுகள் வலுப்பெறும் என்று தாம் நம்புவதாக கூறினார்.

பாகிஸ்தான் விபத்து (08)

பாகிஸ்தான், இஸ்லாமாபாத்திலுள்ள ஒரு மருத்துவமனையின் மகப்பேறு மருத்துவப் பிரிவில் இன்று ஏற்பட்ட தீ விபத்தில் 14 பச்சிளம் குழந்தைகள் உயிரிழந்துள்ளன. மருத்துவ மனையின் தாய் சேய் பிரிவின் 3ஆவது மாடியில் தீவிபத்து ஏற்பட்ட போது பச்சிளங்குழந்தைகள் உயிரிழந்ததாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. மீட்புக் குழுக்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். தீ விபத்து குறித்து விசாரிக்க விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.